

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in · murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 14 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 08 – ஞாயிற்றுக்கிழமை 24 ஆகஸ்ட் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 14 : Thiruvalluvar Year - 2056 - Aavani 08 - Sunday 24 August 2025 - Madurai 16 Pages ₹ 5.00


### “மாநிலங்களில் சுயாட்சி; ஒன்றியத்தில் கூட்டாட்சி” எனும் விழுமியங்கள் கொண்டதாக

# இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்!

## ஒன்றிய – மாநில உறவுகள் குறித்த தேசியக் கருத்தரங்கில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஆக.24 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.8.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த தேசியக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து உரையாற்றுகையில், “மாநிலங்களில் சுயாட்சி; ஒன்றியத்தில் கூட்டாட்சி” எனும் விழுமியங்கள் கொண்டதாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.**

இக்கருத்தரங்கில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -

மாநில சுயாட்சி குறித்த முதல் தேசியக் கருத்தரங்கை தமிழ்நாடு அரசு சார்பில் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் நான் அடைகிறேன்!

பல ஆயிரம் ஆண்டுகளாக தமிழ் மண்ணுக்கு என்று பல சிறப்புகள் இருக்கிறது!

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்று வள்ளுவ நீதியைச் சொல்லும் மண் இது!

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்று உலகளாவிய சகோதரத்துவத்தை வலியுறுத்திய கணியன் பூங்குன்றனார் வாழ்ந்த மண்! இந்த மண்.

**சமூக நீதிக் கோட்பாட்டின் அடிப்படை!**

எல்லோரும் சமம் என்ற சமத்துவ எண்ணத்தின் அடிப்படையில், எல்லோருக்கும் கல்வி கிடைக்க வேண்டும். அனைவரும் அனைத்து உரிமைகளும் பெறவேண்டும் எல்லோரும் அரசுப் பணிகளில் இணையாகப் பணியாற்ற வேண்டும் என்பதுதான் சமூகநீதிக் கோட்பாட்டுக்கு அடிப்படை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.8.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற ஒன்றிய – மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கருத்தரங்கில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.கே.சேகர்பாபு, முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியும், ஒன்றிய – மாநில உறவுகள் குறித்த உயர்நிலை குழுத் தலைவருமான நீதியரசர் குரியன் ஜோசப், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ஜஸ்டி செலமேஸ்வர், முன்னாள் டெல்லி உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, கேரள மாநில முன்னாள் அமைச்சர் தாமஸ் ஐசக், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் உள்ளிட்ட அரசு செயலாளர்கள், ஒன்றிய – மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு உறுப்பினர்கள் அசோக் வர்தன் ஷெட்டி, (ஓய்வு), டாக்டர் நாகநாதன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞர்கள், சட்டத்துறை வல்லுநர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் சுமார் நூறு ஆண்டுகளாக இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றி, பல முற்போக்கான சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றியிருக்கிறோம்! இதற்கு அடித்தளம் அமைத்தது, திராவிட இயக்கம்! பிட்டி தியாகராயர் - டாக்டர் நடேசனார் - டாக்டர் டி.எம்.நாயர் உள்ளிட்ட தலைவர்கள்.

இவர்களின் தொடர்ச்சியாக, தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய தலைவர்கள், சமத்துவம், சமூகநீதி, பெண்ணுரிமை உள்ளிட்ட உயர்ந்த கொள்கைகளுக்காகப் பாடுபட்டார்கள்.

**தமிழ்நாட்டின் அரசியலே சமூக நீதி அரசியல்தான்!**

பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞரும் தங்களுடைய ஆட்சிக்காலங்களில் ஏழை, எளிய மக்கள் அனைத்துத் துறைகளிலும் ஏற்றம் பெறுவதற்கு எடுத்துக்காட்டான பல முற்போக்கான சமூக - பொருளாதார நலத்திட்டங்களை நிறைவேற்றினார்கள். இப்படி, தமிழ்நாட்டின் அரசியல் என்பதே, சமூகநீதி அரசியலாகத்தான் இருக்கிறது!

**பல்வேறு துறைகளிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலம்!**

தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சியுடன் பயன்கள், சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சென்றடைந்திருக்கிறது. ஐ.நா. மன்றத்தின் மானுட மேம்பாட்டுக் குறியீடுகளான தனிநபர் வருமானம், கல்வி, பொது சுகாதாரம், பெண்ணுரிமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற குறியீடுகளில் இந்திய மாநிலங்களுடன் ஒப்பிட்டால், தமிழ்நாடு பல துறைகளில் முதன்மை மாநிலமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

ஒன்றிய அரசு விதிக்கின்ற நேர்முக வரிகளிலும், ஜி.எஸ்.டி. வரிகளிலும் ஒன்றிய அரசுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தருகின்ற மாநிலமாகவும் தமிழ்நாடு இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு தருகின்ற நிதிப் பகிர்வுத் தொகையில், மாநிலம் அளிக்கின்ற வரி வருமானத்துக்கு ஏற்ப, ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசுக்கு உரிய நிதிப் பங்கை வழங்காமல், குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

**அண்ணா, கலைஞர் வழியில் சமூக, பொருளாதாரத் திட்டங்கள்!**

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய வழியில் சிறந்த பல சமூகப் பொருளாதாரத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி, கடந்த நான்கரை ஆண்டுகளாக திராவிட மாடல் ஆட்சியை தமிழ்நாட்டு மக்களுக்கு நாம் வழங்கி வருகிறோம். பல்வேறு நெருக்கடிகளையும் மீறி, போராடி தமிழ்நாட்டை உயர்த்தி வருகிறோம்.

● 1967ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் தன்னுடைய சட்டமன்ற உரையில், “மாநிலங்கள் உரிமை பெற அரசமைப்புச் சட்டத்தில் மறு ஆய்வு தேவையானது” என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

---

### “இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம்” – நீதியரசர் குரியன் ஜோசப்!

# ‘மத்திய அரசு’ என்ற வார்த்தையே அரசியல் சட்டத்தில் இல்லை!

## தேசியக் கருத்தரங்கில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஸ்வர் பேச்சு!

சென்னை, ஆக. 24 -

சென்னை கலைவாணர் அரங்கில் ஒன்றிய மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். ஒன்றிய - மாநில உறவுகள் குறித்து உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் அறிமுக குறிப்புரை வழங்கினார்.

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஸ்வர், ‘கூட்டாட்சியும் அதிகாரப் பரவலும்’ என்ற தலைப்பில் உரையாற்றினார்.

தொகுதி சீரமைப்பு மற்றும் தேர்தல் குறித்து டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, குடியரசுத்தலைவர் மற்றும் ஆளுநர்களின் பங்கு குறித்து தேசிய நீதித்துறை அகாடமியின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜி.மோகன் கோபால், மொழி, கல்வி, சுகாதாரம் என்ற தலைப்பில் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் அசோக் வர்தன் ஷெட்டி ஆகியோர் உரையாற்றினர்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் வரவேற்புரை ஆற்றினார்.



**உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் குரியன் ஜோசப்!**

ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கில் பேசிய உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப், இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என அரசியல் சட்டம் தெளிவாக குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த மறு ஆய்வு செய்ய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முடிவு செய்துள்ளதை வரவேற்பதாக கூறினார்.

இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என அரசியல் சட்டம் தெளிவாக குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், ஜனநாயக நாட்டில், மக்களும் ஒன்றிய அரசும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும் என்றும் கூறினார்.



**உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஸ்வர்!**

நமது அரசியல் சாசனம் கூட்டாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டது.

இந்நிகழ்ச்சியில் பேசிய உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஸ்வர், இந்தியாவின் அரசியல் சாசனம் கூட்டாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டது எனத் தெரிவித்தார். இந்திய அரசியல் சாசனத்தினால் மட்டுமே இந்தியாவின் பல சமஸ்தானங்களை ஒன்றாக இணைக்க முடிந்ததாகவும் அவர் கூறினார். நாட்டின் இறையாண்மை என்பது அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாகவே உள்ளது என்றும் உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் ஒன்றிய அரசு நிர்வாகத்தின் ஒருபகுதி அல்ல, அவை சுயேட்சையானவை என்றும் கூறிய நீதிபதி செலமேஸ்வர், ஒன்றிய அரசின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்றும் அதனை விரைவில் நிறைவேற்றுவது அனைவருக்கும் நல்லது என்றும் தெரிவித்தார்.

காடுகளின் நிர்வாகம் 3வது பட்டியலுக்கு மாற்றப்பட்டது வேடிக்கை. காடுகளை நிர்வகிப்பதற்கு ஒரு மாநில அரசால் முடியாதா? கல்வியும் இதே போல் மாற்றப்பட்டது “மத்திய அரசு” என்ற வார்த்தை அரசியல் சாசனத்தில் இல்லை “மத்திய அரசு” என்பது வெள்ளையர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 1935 ஆம் ஆண்டு சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒன்றிய- மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கம் ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கின் 2ம் அமர்வு நேற்று பிற்பகல் நடைபெற்றது. இதில், கேரள மாநில முன்னாள் நிதியமைச்சர் டாக்டர் தாமஸ் ஐசக், தேசிய பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் எம்.கோவிந்தராவ், தமிழ்நாடு திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் நாகநாதன், மூத்த வழக்கறிஞர் சஞ்சய் ஹெக்டே, தமிழ்நாடு நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்டவர்கள் உரையாற்றினர்.

---

## செப்டம்பர் 3,4ல் கூடுகிறது ஜி.எஸ்.டி. கவுன்சில்!

புதுடெல்லி, ஆக. 24 -

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையிலான உயர் அதிகாரம் கொண்ட ஜி.எஸ்.டி. கவுன்சில் செப்டம்பர் 3, 4ஆம் தேதிகளில் கூடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 2 நாள் கூட்டம் டெல்லியில் நடைபெறும் என்றும் ஜி.எஸ்.டி. கவுன்சில் செயலகம் தெரிவித்துள்ளது. தற்போது உள்ள 5, 12,18, 28 சதவீத ஜி.எஸ்.டி.யை இனி 5 மற்றும் 18 ஆக மாற்றவும், எல்.ஐ.சி., ஹெல்த் இன்சூரன்சிற்கு ஜி.எஸ்.டி.யை ரத்து செய்யவும் இந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட உள்ளது.

இதில் அனைத்து மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்.

## குஜராத்தில் 2 முறை நிலநடுக்கம்!

காந்திநகர், ஆக. 24 -

குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 10.12 மணியளவில், 2001 நிலநடுக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பச்சாவ் நகருக்கு அருகே 3.4 ரிக்டர் அளவில் முதல் நிலநடுக்கம் பதிவானது. மக்கள் இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், சரியாக 7 நிமிடங்கள் கழித்து, இரவு 10.19 மணியளவில் ராப்பர் நகருக்கு அருகே 2.7 ரிக்டர் அளவில் இரண்டாவது நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த அடுத்தடுத்த நில அதிர்வுகளால் மக்கள் பீதியடைந்தனர். இருப்பினும், இந்த இரண்டு நிலநடுக்கங்களாலும் எந்தவிதமான உயிர்ச் சேதமோ, காயங்களோ அல்லது குறிப்பிடத்தக்க பொருட்சேதமோ ஏற்படவில்லை என மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.